## இனிமையான குழந்தைகளே! ஆத்ம அபிமானிகளாக ஆகின்ற பொழுது விகல்பங்கள் (வீண் எண்ணங்கள்) முடிந்து போய்விடும், எந்த விசயத்திலும் பயம் ஏற்படாது, நீங்கள் கவலைகளிலிருந்து விடுபட்டு விடுவீர்கள்.

கேள்வி: புது மரத்தின் வளர்ச்சியானது எந்த வகையில் ஏற்படுகிறது? மற்றும் ஏன் ஏற்படுகிறது?

பதில்: புதிய மரத்தின் வளர்ச்சி மிகவும் சிறிது சிறிதாக மற்றும் பேன் நகர்வது போன்று ஏற்படு கிறது. எவ்வாறு நாடகம் பேன் நகர்வது போன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ, அவ்வாறே நாடகப்படி இந்த மரமும் சிறிது சிறிதாக வளர்ந்துக் கொண்டிருக்கிறது. ஏனெனில் இதில் மாயாவை அதிகமாக எதிர்கொள்ள வேண்டி யிருக்கிறது. குழந்தைகளுக்கு ஆத்ம அபிமானியாக ஆவதற்கு முயற்சி தேவைப்படுகிறது. ஆத்ம அபிமானியாக ஆகின்ற பொழுது அதிக மகிழ்ச்சி யிருக்கும். சேவையிலும் முன்னேற்றம் ஏற்படும். தந்தை மற்றும் ஆஸ்தியின் நினைவு இருந்தால் கவலைகள் விலகி விடும்.

ஓம் சாந்தி. ஆன்மீகத் தந்தை வந்து ஆன்மீகக் குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார். ஆன்மீகத் தந்தையும் அழிவற்ற மூர்த்தியாக இருக்கின்றார். ஆன்மீகத் தந்தை என்று பரம்பிதா பரமாத்மா கூறப்படுகின்றார். குழந்தைகளாகிய நீங்களும் அழிவற்ற மூர்த்திகளாக இருக்கிறீர்கள். நீங்கள் சீக்கியர்களுக்கும் நல்ல முறையில் புரிய வைக்க முடியும். எந்த தர்மத்தினருக்கும் புரிய வைக்க முடியும். இந்த மரம் சிறிது சிறிதாக வளரும் என்பதையும் தந்தை புரிய வைத்திருக்கின்றார். எவ்வாறு நாடகம் பேன் நகர்வது போன்று நடைபெறுகிறது. அவ்வாறு மரமும் பேன் நகர்வது போன்று வளர்கிறது. வளர்ச்சி அதிகரிப்பதற்கு முழு கல்பமும் ஆகிவிடுகிறது. இப்பொழுது உங்களுடையது புதிய மரமாகும். குழந்தைகளாகிய உங்களுக்கும் கல்பத்தின் ஆயுளாகி விடுகிறது. 5 ஆயிரம் ஆண்டுகளாக நீங்கள் சக்கரத்தில் வருகிறீர்கள். பேன் நகர்வது போன்று இந்த சக்கரம் சுற்றுகிறது. முதன் முதலில் ஆத்மாவைப் புரிந்து கொள்ள வேண்டும். இது கடினமான விசய மாகும். நாடகப்படி சிறிது சிறிதாக மரம் வளரும் என்பதை தந்தை அறிவார். ஏனெனில் மாயாவின் எதிர்ப்பு இருக்கிறது. இந்த நேரத்தில் அதன் இராஜ்யமாக இருக்கிறது, பிறகு இராவணனே இருக்க மாட்டான். குழந்தைகளாகிய நீங்கள் முதலில் ஆத்ம அபிமானிகளாக ஆக வேண்டும். ஆத்ம அபிமானி குழந்தைகள் சேவை மிக நன்றாக செய்வர், மேலும் மிகுந்த குஷியுடனும் இருப்பர். புத்தியில் வீணான தவறான எண்ணங்களும் வராது. நீங்கள் மாயாவை வென்று விட்டால் பிறகு யாரும் உங்களை அசைக்கவே முடியாது. அங்கதனின் உதாரணம் இருக்கிறது அல்லவா! அதனால் தான் உங்களுக்கு மகாவீர் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒருவர் கூட மகாவீராக கிடையாது. கடைசியில் மகாவீரர்களாக ஆவீர்கள். அதுவும் வரிசைக்கிரமமாக! யார் நன்றாக சேவை செய்கின்றார்களோ அவர்கள் மகாவீர் என்ற வரிசையில் வைக்கப் படுவர். இப்பொழுது வீரர்களாக இருக்கிறீர்கள், கடைசியில் மகாவீரர்களாக ஆவீர்கள். சிறிதுகூட எந்த சந்தேகமும் வரக் கூடாது. சிலர் அதிக அகங்காரத்தில் வந்து விடுகின்றனர். அனைவரையும் அலட்சியப்படுத்தி விடுகின்றனர். இதில் மிகவும் பணிவுடன் இருந்து மற்றவர்களுக்குப் புரிய

வைக்க வேண்டியிருக்கிறது. அமிர்தசரஸில் நீங்கள் சீக்கியர்களுக்கு சேவை செய்ய முடியும். அனைவருக்கும் ஒரே ஒரு செய்தி தான் கொடுக்க வேண்டும். தந்தையை நினைவு செய்வதன் மூலம் உங்களது ஆத்மாவின் கறைகள் நீங்கி விடும். எஜமானனை ஜெபித்தால்..... என்று அவர்கள் கூறுகின்றனர். ஏகோங்கார் சத்தியமானவர், அழிவற்றவர். அழிவற்ற மூர்த்தியாக இருப்பது யார்? சத்குரு அகால் என்று கூறுகின்றனர். அகால மூர்த்தியாக இருப்பது ஆத்மா அல்லவா! அதை காலனால் ஒன்றும் செய்ய முடியாது. ஆத்மாவிற்கும் பாகம் கிடைத்திருக்கிறது. அதை நடித்தே ஆக வேண்டும். அதை காலன் எப்படி அழிக்க முடியும்? சரீரத்தை அழித்து விடுகிறது. ஆத்மா வானது அழிவற்றது ஆகும். சீக்கியர்களிடம் சென்று நீங்கள் சொற்பொழிவு செய்யுங்கள். கீதை கூறுபவர்களும் சொற்பொழிவு செய்கின்றனர். பக்தி மார்க்கத்தின் சடங்குகள் பல உள்ளன என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். சிறிதும் ஞானம் கிடையாது. ஞானக்கடலானவர் ஒரே ஒரு தந்தை ஆவார். மனிதர்கள் ஞானமுடையவர்கள் என்று கூற முடியாது. தேவதைகளும் மனிதர்கள் அல்லவா! ஆனால் தெய்வீக குணங்கள் இருப்பதால் தேவதைகள் என்று கூறப்படுகின்றனர். அவர்களுக்கும் தந்தையிடமிருந்து தான் ஆஸ்தி கிடைத்திருந்தது. நீங்களும் இந்த இராஜயோகத்தின் மூலம் உலகிற்கு எஜமானர்களாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். சத்குரு அகால் என்று கூறுகின்றனர். சத்தியமானவர் அந்த ஒரே ஒரு தந்தை ஆவார். அவரே பதீத பாவனாக இருக்கிறார். இரண்டு தந்தைகளின் அறிமுகமும் கொடுக்க வேண்டும். உங்களுக்கு இரண்டு நிமிடம் பேசுவதற்கு கிடைத்தாலும் பெரிய விசயமாகும். ஒரு நிமிடம், ஒரு நொடி கிடைத்தாலும் பெரிய விசயமாகும். யாருக்கு முந்தைய கல்பத்தில் அம்பு பதிந்ததோ அவர்களுக்குத் தான் பாயும், எதுவும் பெரிய விசயம் இல்லை. செய்தி கொடுத்தால் போதும். பாபா புரிய வைத்திருக்கின்றார் - குருநானக் வருவதாக வைத்துக் கொளுங்கள், நீங்கள் வீடு திரும்ப வேண்டும், அதற்குத் தூய்மையாக வேண்டும் என்ற செய்தி கொடுப்பது கிடையாது. அவர்கள் தூய்மையான ஆத்மாக்கள் மேலிருந்து வருகின்றனர். அவர்களது தர்மம் விரிவடைகிறது, வந்து கொண்டே இருக்கின்றனர். உண்மையில் சத்கதி கொடுக்கும் வள்ளலாக எந்த மனிதனும் ஆக முடியாது. சத்கதி கொடுக்கும் வள்ளல் ஒரே ஒரு தந்தை ஆவார். மனிதர்கள் மனிதர்கள் தான், பிறகு இந்த தர்மத்தைச் சார்ந்தவன் என்று கூறப்படுகிறது. தந்தை புரிய வைக்கின்றார் - நீங்கள் உங்களை ஆத்மா என்று உணருங்கள், தூய்மையாக ஆகுங்கள். அசுத்த ஆடைகளை துவைப்பது..... என்று குருநானக் கூறியிருக்கிறார். இதுவும் பின் நாட் களில் சாஸ்திரங்கள் எழுதியவர்கள் உருவாக்கியது ஆகும். முதலில் மிகக் குறைவாக இருந்தது. அதை வந்து எப்படிக் கூறுவது? இந்த ஞானமும் இப்பொழுது தந்தை உங்களுக்குக் கொடுக்கின்றார். பிறகு சாஸ்திரங்களாக பின் நாட்களில் உருவாகின்றன. சத்யுகத்தில் சாஸ்திரங்கள் இருக்காது. தந்தையை நினைவு செய்தால் விகர்மங்கள் விநாசம் ஆகும் என்பதை முதலில் புரிய வைக்க வேண்டும். விநாசம் ஆகியே தீர வேண்டும். ஏகோங்கார் என்று கூறுகிறீர்கள், பிறகு சர்வவியாபி என்று யாரைக் கூறுகிறீர்கள்? என்று கேளுங்கள். அவர் தந்தை அல்லவா! அவரது குழந்தைகளாகிய நாமும் அழிவற்றவர்களாக இருக்கிறோம். நமது சிம்மாசனம் இதுவாகும். நாம் ஒரு சிம்மாசனத்தை விடுத்து மற்றொன்றை எடுக்கிறோம். 84 சிம்மாசனத்தில் அமர்கிறோம். இப்பொழுது இது பழைய உலகமாகும், எவ்வளவு குழப்பங்கள் உள்ளன! புது உலகில் இந்த

விசயங்கள் இருக்க முடியாது. அங்கு ஒரே ஒரு தர்மம் மட்டுமே இருக்கும். தந்தை உங்களுக்கு உலக இராஜ்யம் கொடுக்கிறார். உங்கள் மீது யாரும் படை யெடுக்க முடியாது. துவாபர யுகத்திலிருந்து அவரவர்களது தர்மத்தை ஸ்தாபனை செய்வதற்கு தர்ம ஸ்தாபகர்கள் வருகின்றனர். அவர்களது தர்மம் வளர்ச்சி அடையும் பொழுது, வ-மை அதிக மாகும் பொழுது தான் யுத்தத்திற்கான விசயம் ஏற்படுகிறது. இஸ்லாமியர்கள் முதலில் எவ்வளவு குறைவாக இருந்திருப்பார்! உங்களது தர்மம் இங்கு ஸ்தாபனை ஆகின்றது. பிறகு ஒவ்வொரு வராக வந்து கொண்டே இருப்பீர்கள். இது மிகவும் புரிந்துக் கொள்ள வேண்டிய விசயமாகும். சிலரால் நாடகப்படி எதையும் தாரணை செய்ய முடிவது கிடையாது. அவர்களது பதவி கண்டிப்பாக குறைவாக இருக்கும் என்று தந்தை புரிய வைக்கின்றார். இது சாபம் எதுவும் கிடையாது. மகாவீரர்களுக்குத் தான் மாலை உருவாகின்றன. நாடகப்படி அனைவரும் ஒன்று போல் முயற்சி செய்ய முடியாது. முன்பும் செய்திருக்க முடியாது. பிறகு என்னிடம் என்ன குறை இருக்கிறது? என்று கேட்கின்றனர். உங்களிடம் எந்த குறையுமில்லை என்று தந்தையும் கூறுகின்றார். அதிர்ஷ்டத்தில் இல்லையெனில் தந்தை என்ன செய்ய முடியும்? யார் யார் எந்த பதவிக்கு தகுதியானவர்களாக இருக்கின்றனர் என்பதைப் புரிந்து கொள்கின்றார். எஜமானரை நினைத்தால் சுகம், சாந்தி கிடைக்கும் என்று சீக்கியர்களுக்கும் புரிய வைக்க வேண்டும். அவர்களது தர்மம் ஸ்தாபனை ஆகின்ற பொழுது தான் அவர்களுக்கு சுகம் கிடைக்கிறது. இப்பொழுது அனைவரும் கீழே வந்து விட்டனர். சத்குரு அகால்...... என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள். பிறகு யாரை குரு என்று கூறுகிறீர்கள்? சத்கதி கொடுக்கும் குரு ஒருவர் தான். பக்தி கற்றுக் கொடுப்பதற்கு குருக்கள் பலர் தேவை. ஞானம் கற்றுக் கொடுப்பவர் ஒரே ஒரு தந்தை ஆவார். ஆக தாய்மார்களாகிய நீங்கள் அவர்களுக்குப் புரிய வையுங்கள் - நீங்கள் கட்டிக் கொள்ளும் இந்த கங்கணமானது தூய்மையின் அடையாளமாகும். உங்களுடையதை அவர்கள் ஏற்றுக் கொள்வார் கள். ஏனெனில் தாய்மார்களாகிய நீங்கள் தான் சொர்க்க வாசலைத் திறக்கக் கூடியவர்கள். தாய்மார்களாகிய உங்களுக்கு இப்பொழுது ஞானக் கலசம் கிடைத்திருக்கிறது. இதன் மூலம் அனைவருக்கும் சத்கதி ஏற்பட்டு விடுகிறது.

குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது தன்னை மகாவீர் என்று கூறிக் கொள்கிறீர்கள். குடும்பத்தில் இருந்து கொண்டே சொர்க்கத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம் என்று நீங்கள் கூற முடியும். இரவு பகல் வித்தியாசம் இருக்கிறது. இந்த சிக்கலான சடை முடி கூட தூய்மையின் அடையாளமாகும். அகால மூர்த்தியாகிய பதீத பாவன் தந்தையின் மகிமையை முழுமையாகச் செய்ய வேண்டும். சாது சந்நியாசிகள் பரமாத்மா நமஹ என்று கூறுகின்றனர். பிறகு சர்வவியாபி என்றும் கூறுகின்றனர். இது தவறாகும். தந்தையின் மகிமையை நீங்கள் அதிகம் செய்யுங்கள். தந்தையின் மகிமையின் மூலம் நீங்கள் நீந்தி விடுகிறீர்கள். ராம் ராம் என்று கூறினால் கடந்து விடலாம் என்ற கதையும் இருக்கிறது. தந்தையும் கூறுகின்றார் - தந்தையை நினைவு செய்தால் விஷக் கடலை கடந்து விடுவீர்கள். நீங்கள் அனைவரும் முக்திக்குச் சென்றே ஆக வேண்டும். நீங்கள் அமிர்தரசஸுக்குச் சென்று சொற்பொழிவு செய்யுங்கள் - சத்குரு அகால்மூரத்..... என்று நீங்கள் அழைக்கிறீர்கள், ஆனால் அவர் (சத்குரு) இப்பொழுது கூறுகின்றார் - தேக சகிதமாக தேகத்தின் அனைத்து தர்மத்தையும் விட்டு விட்டு தன்னை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள்.

தந்தையை நினைவு செய்தால் பாவங்கள் அழிந்து விடும். கடைசி நிலை நல்ல நிலையாக ஆகிவிடும். சிவபாபா அகால்மூரத், நிராகாராக இருக்கின்றார். ஆத்மாக்களாகிய நீங்களும் நிராகாராக இருக்கிறீர்கள். எனக்கென்று சரீரம் கிடையாது, நான் கடனாக எடுக்கிறேன் என்று தந்தை கூறுகின்றார். இராவணனை வெல்வதற்காக நான் தூய்மையில்லாத உலகிற்கு வருகிறேன். இங்கு தான் கட்டளை கொடுப்பேன். ஏனெனில் பழைய உலகில் தான் தூய்மை இல்லாதவர்களாக ஆகிறீர்கள். புது உலகில் ஒரே ஒரு தேவி தேவதா தர்மம் இருந்தது, அந்த நேரத்தில் மற்ற அனைவரும் சாந்திதாமத்தில் இருந்தனர். பிறகு வரிசைக்கிரமமாக சதோ, ரஜோ, தமோவில் வருகின்றனர். யார் அதிக சுகம் அடைகின்றனரோ அவர்களே அதிக துக்கமும் அடைகின்றனர்.

நீங்கள் அனைவருக்கும் தந்தையின் செய்தி கொடுக்க வேண்டும் - தந்தையை நினைவு செய்தால் வீட்டிற்குச் சென்று விடுவீர்கள். எப்பொழுது மரம் (கல்பம்) முடிவடைகிறதோ, அனைவரும் வந்து விடுகிறார்களோ அப்பொழுது தான் அனைவருக்கும் சத்கதி ஏற்படுகிறது. இவ்வாறு நீங்களும் மிக அன்புடன் பொறுமையாக மற்றவர்களுக்குப் புரிய வையுங்கள். நீங்கள் சித்திரங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியமும் கிடையாது. உண்மையில் புதியவர்களுக்காகத் தான் சித்திரங்கள் உள்ளன. எந்த தர்மத்தினருக்கும் நீங்கள் புரிய வைக்க முடியும். ஆனால் குழந்தை களிடம் அம்பு பாயுமளவிற்கு யோகா கிடையாது. பாபா, நான் தோல்வியடைந்து விட்டேன் என்று கூறுகின்றனர். மாயை முற்றிலுமாக கருப்பான முகமாக ஆக்கி விடுகிறது. நான் தேவதையாக இருந்தேன், இந்த நேரத்தில் அசுரனாக இருக்கிறேன் என்பதும் அவர்களுக்குத் தெரிவது கிடையாது.

இப்பொழுது தந்தை கூறுகின்றார் - தன்னை ஆத்மா என்று உணர்ந்து தந்தையை நினைவு செய்யுங்கள். தந்தையின் செய்தி அனைவருக்கும் கொடுத்துக் கொண்டே இருங்கள். சினிமா சிலைட்டிலும் எழுதுங்கள் - என்னை நினைவு செய்தால் உங்களது விகர்மங்கள் அழிந்து விடும் என்று திரிமூர்த்தி பரம்பிதா பரமாத்மா சிவன் கூறுகின்றார், நீங்கள் முக்தி, ஜீவன் முக்தி அடைந்து விடுவீர்கள். அனைவருக்கும் செய்தி கொடுக்க வேண்டும் அல்லவா! சிலைட் உருவாக்க வேண்டும். இதன் மூலம் மன்மனாபவ என்ற வசீகரிக்கும் மந்திரத்தை அனைவருக்கும் கொடுங்கள். இந்த படிப்பில் தாமதம் ஏற்படுவது கிடையாது. நாளடைவில் அனைவரும் புரிந்து கொள்வர். கவலைப்படும் விசயம் ஏதுமில்லை. கவலைகளிலிருந்து விடுபட்டே ஆக வேண்டும். மனிதர்களைப் பாருங்கள் மரணத்திற்கு எவ்வளவு பயப்படுகின்றனர்! இங்கு பயப்படும் விசயமே கிடையாது. மரணம் வரக்கூடாது என்று நீங்கள் கூறுகிறீர்கள். இப்பொழுது நாம் பரீட்சையை முடிக்கவில்லை. இப்பொழுது யாத்திரையை முடிக்கவில்லையெனும் பொழுது ஏன் சரீரத்தை விட வேண்டும்? இவ்வாறு இனிமையான விசயங்கள் தந்தையிடம் செய்ய வேண்டும். மிக நல்ல பழக்கமாக ஆகிவிடும். இங்கு சித்திரங்களின் முன்னால் வந்து அமர்ந்து விடுங்கள். பாபாவிட மிருந்து நமக்கு உலக இராஜ்யம் கிடைக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆக அப்படிப்பட்ட தந்தையை அதிகம் நினைவு செய்ய வேண்டும் அல்லவா! நினைவு செய்யவில்லை யெனில் தண்டனை அடைய வேண்டியிருக்கும். நான் இவ்வாறு ஆகப்போகிறேன் என்ற நினைவு பிரம்மா பாபாவிற்கு வந்து விட்டது. ஆக நான்

இவ்வாறு ஆவேன் என்ற குஷி அதிகம் இருந்தது. பார்ததுமே போதை அதிகரித்து விடுகிறது. நீங்களும் இவ்வாறு ஆக வேண்டும். பாபா, நாம் உங்களை நினைவு செய்து அவசியம் இவ்வாறு ஆவோம். வேறு எந்த வேலையும் கிடையாது எனில் இங்கு சித்திரங்களின் முன் வந்து அமர்ந்து விடுங்கள். தந்தையின் மூலம் நமக்கு இந்த ஆஸ்தி கிடைக்கிறது. இதை உறுதி ஆக்கி விடுங்கள். இந்த யுக்தி குறைந்தது கிடையாது. ஆனால் அதிர்ஷ்டத்தில் இல்லை யெனில் நினைவு செய்வது கிடையாது. பாபா கூறுகின்றார் - இங்கு வருகிறீர்கள் எனில் அதிக பயிற்சி செய்யுங்கள். கிரஹச்சாரம் எதுவாக இருந்தாலும் இது நீங்கி விடும். ஏணிப்படி சித்திரத்தில் இவ்வாறு சிந்தனை செய்யுங்கள். ஆனால் அதிர்ஷ்டத்தில் இல்லை யெனில் ஸ்ரீமத்படி நடக்க முடியாது. பாபா வழி கூறுகின்றார், மாயை துண்டித்து விடுகிறது. பாபா பல யுக்திகளைக் கூறுகின்றார். தந்தை மற்றும் ஆஸ்தியை நினைவு செய்து கொண்டே இருங்கள். அதீந்திரிய சுகம் பற்றி கோப கோபியர்களிடம் அதாவது நாம் தந்தையிடமிருந்து ஆஸ்தி அடைந்தே தீருவோம் என்பவரிடம் கேளுங்கள் என்று கூறப்படுகிறது. பாபா சொர்க்கத்தை ஸ்தாபனை செய்து அதில் நம்மை எஜமானர்களாக ஆக்குகின்றார். சித்திரங்களும் இவ்வாறு உருவாக்கப்பட்டிருக்கிறது. பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது? என்பதை நீங்கள் நிரூபித்துக் கூறுகிறீர்கள். வேறு யாருக்கும் தெரியாது, பிரம்மாவின் சித்திரம் பார்த்ததும் குழப்ப மடைந்து விடுகின்றனர். ஸ்தாபனை செய்வதில் கால தாமதம் அவசியம் ஏற்படுகிறது. கர்மாதீத நிலைக்கும் நேரம் ஏற்படுகிறது. அடிக்கடி மறந்து விடுகிறீர்கள். இந்த பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். தீவிர பக்தி செய்பவர்களும் கூட சிலையின் முன் அமர்ந்து விடுகின்றனர் - எனக்கு காட்சி கிடைக்க வேண்டும். நீங்கள் இவ்வாறு ஆகிறீர்கள் எனில் நீங்கள் நினைவு செய்ய வேண்டும். உங்களிடம் பேட்ஜும் இருக்கிறது. பாபா தனது பக்தி மார்க்கத்தின் உதாரணமும் கூறுகின்றார் - எனக்கு நாராயணன் சிலையின் மீது மிகுந்த அன்பு இருந்தது. அவையனைத்தும் பக்தி மார்க்கத்தினுடையது. இப்பொழுது தந்தை கூறுகின்றார் - என் ஒருவனை நினைவு செய்யுங்கள், வேறு எதுவும் செய்ய வேண்டாம். நான் கீழ்படிதலுள்ள சேவகன் என்று பாபா கூறுகின்றார். எனக்கு நீங்கள் ஏன் தலை வணங்குகிறீர்கள்? நல்லது.

இனிமையிலும் இனிய, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) பணிவு குணத்தை தாரணை செய்ய வேண்டும் - சிறிதும் அகங்காரத்தில் வரக் கூடாது- மாயாவினால் அசைக்க முடியாத அளவிற்கு மகாவீராக ஆக வேண்டும்.

2) அனைவருக்கும் மன்மனாபவ என்ற வசீகர மந்திரத்தைக் கூற வேண்டும். மிக அன்பாக மற்றும் பொறுமையாக அனைவருக்கும் ஞான விசயங்களைக் கூற வேண்டும். தந்தையின் அறிமுகத்தை அனைத்து தர்மத்தினருக்கும் கொடுக்க வேண்டும்.

வரதானம் கர்மம் மற்றும் சம்பந்தம் இரண்டிலும் சுயநலமான உணர்விலிருந்து

: விடுபட்டு இருக்கும் தந்தைக்கு சமமான கர்மாதீதர் ஆவீர்களாக. அனைவரையும் முக்தராக ஆக்குவது குழந்தைகளாகிய உங்களுடைய சேவையாகும். எனவே மற்றவர்களை முக்தராக ஆக்குகையில் சுயம் நீங்கள் உங்களை பந்தனத்தில் கட்டுப்படுத்தி கொண்டு விடாதீர்கள். எல்லைக்குட்பட்ட எனது எனது என்பதிலிருந்து முக்தராக (விடுபட்டவராக) ஆகும் பொழுதே, அவ்யக்த நிலையை நீங்கள் அனுபவம் செய்யக் கூடியவர்களாக ஆவீர்கள். எந்த குழந்தைகள் லௌகீகம் மற்றும் அலௌகீகம், கர்மம் மற்றும் சம்பந்தம் இவை இரண்டிலும் சுயநல உணர்விலிருந்து விடுபட்டவர்களாக இருக்கிறார்களோ, அவர்களே தந்தைக்கு சமானமாக கர்மாதீத நிலையை அனுபவம் செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள். எனவே எதுவரை கர்மங்களின் பந்தனத்திலிருந்து விலகியவராக ஆகி உள்ளேன் என்பதை செக் செய்யுங்கள். வீணான சுபாவம் சம்ஸ்காரம் ஆகியவற்றிற்கு வசப்பட்டு விடுவதிலிருந்து முக்தராக ஆகி உள்ளேனா? எப்பொழுதாவது ஏதாவது பிந்தைய சம்ஸ்காரம் சுபாவம் என்னை வசப்பட்டவராக ஒன்றும் ஆக்கி விடுவதில்லையே என்பதை செக் செய்யுங்கள்.

சுலோகன்: ஸ்லோகன்: சமானம் மற்றும் சம்பூர்ணம் ஆக வேண்டும் என்றால் சிநேகக் கடலில் மூழ்கி விடுங்கள். அவ்யக்தி சைலன்ஸ் மூலமாக டபிள் லைட் ஃபரிஷ்தா நிலையை அனுபவம் செய்யுங்கள்.

அவ்யக்த அமைதி மூலம் டபுள் லைட்டின் பரிஸ்தா மனநிலையை அனுபவம் செய்யுங்கள்

நான் டபிள் லைட் ஃபரிஷ்தா ஆவேன் என்ற இதே தீவிர முயற்சியின் லட்சியமாக கொள்ளுங்கள். நடந்தாலும் சென்றாலும் ஃபரிஷ்தா சொரூபத்தின் உணர்வினை அதிகரியுங்கள். டீப் சைலன்ஸ் - ஆழமான அமைதி மூலமாக அசரீரி நிலையின் அப்பியாசம் செய்யுங்கள். ஒரு நொடியில் எந்தவொரு சங்கல்பங்களையும் சமாப்தி செய்வதில் சம்ஸ்காரம் சுபாவத்திலும் டபிள் லைட் - லேசாகவும் ஒளியாகவும் இருங்கள்